**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **STC.No.780/2017**

Deposition of PW–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | அப்துல் மஜித் | **Age** | : | 55/2026 |
| **Father Name** | : | பக்கீர் முகமது | **Religion** | : | முஸ்லீம் |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | விவசாயம் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27 day February 2026.**

எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2) நான் தாக்கல் செய்துள்ள நீருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். அதில் உள்ள விசயங்கள் நான் தான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன் என்றால், சரிதான். பாண்டியராஜனை எனக்கு சுமார் 10 முதல் 15 வருடங்களாக தெரியும். எதிரி எனக்கு குடும்ப பழக்க வழக்கமா? என்றால், இல்லை. எதிரிக்கு உடன்பிறந்த தம்பி ஒருவர் உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். அவர் பெயர் செந்தில் என்றால், அதுவும் தெரியும். செந்தில்க்கு ஏதேனும் பணம் கொடுத்தேனா? என்றால், இல்லை. நகை கொடுத்திருந்தேன். அதை அவர் ஏமாற்றி விட்டார். நான் போலிசில் புகார் கொடுப்பதாக சொன்னதால் 2 மாதங்கள் கழித்து பணத்தை ஒப்படைத்துவிட்டார்.

3) இந்த விபரத்தை இந்த வழக்கின் புகாரில் சொல்லியுள்ளேனா? என்றால், இல்லை. நான் செந்தில் என்பவரிடம் தான் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தேன் என்றும், அதற்கு செக்யுரிட்டியாக எதிரியின் காசோலை என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. எதிரி தர வேண்டிய நகைக்காக தான் காசோலையை கொடுத்தார். அவரது தம்பிக்காக எதிரி காசோலையை கொடுக்கவில்லை. 2 முறை வழக்கறிஞர் அனுப்பினேனா? என்றால், ஆமாம். அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால்,

சரிதான். இந்நீதிமன்றத்தில் எதிரியை தவிர வேறு யாரு மீதாவது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா? என்றால், ஆமாம். ஜெயபால் என்பவர் மீது STC 377/2022 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் ஸ்டாலின் என்பவர் மீது CC 82/2013 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்குகளும் இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான்.

4) மேலே சொன்ன வழக்குகளில் உள்ள நபர்களுக்கும் இந்த எதிரிக்கும் வட்டிக்கு நான் பணம் கொடுத்ததால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. ஸ்டாலின் என்பவர் மீது கொடுத்த வழக்கு நகை மோசடி வழக்கு. நான் சொல்வது போல் நகைக்கும் பாண்டியராஜ் என்பவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. எதிரியின் தம்பி ரூ.20,000/- வாங்கியிருந்தார் என்றும், அதனை வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்டார் என்றும், அதற்கு ஆதரவாக தான் எதிரி வழக்கு காசோலையை கொடுத்தார் என்று சொன்னால், சரியல்ல.

5) பணத்தை திருப்பி செலுத்திய பிறகு எதிரி காசோலையை திரும்ப கேட்டார் என்றும், நான் திருப்பி தருவதாக சொல்லி காலம் கடத்தி வந்தேன் என்று சொன்னால், சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல. வழக்கு தொகைக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.02.27 15:47:07 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**